Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 15
இதழ் 326

யாழ்ப்பாணம் மார்கழி 22 ஜுக்த 18 வியாழக்கிழமை (6 1-72)

சகல விதமான
றேடியோக்கள்-ரான்ஸிஸ்டர்
ஐஸ்பெட்டி (Refrigerator)
இஸ்திரிக்கைப் பெட்டி
முதலியன
சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்
றேடியோ
இன்ஜினியரிங் வேக்ஸ்
(பள்ளிவாசலுக்குப் பக்கத்தில்)
28, பஸார் ஒழுங்கை - யாழ்ப்பாணம்

JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY
6 JAN 1972

# மற்றொரு சுற்றுப் பேச்சின் பின்பே முஜிபுருக்கு விடுதலை!

## ஐ.நா.வின் பாகிஸ்தான் பிரதிநிதி தகவல்

நியூயார்க், ஜனவரி 5

மற்றொரு சுற்றுப்பேச்சு வார்த்தையை பாகிஸ்தான் ஜனாதிபதி ஜனாப் சுல்பிகார் அலி பூட்டோ நடத்திய பின்னர் வங்கத்தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் விடுதலை செய்யப்படுவார்.

ஐ நா விலுள்ள பாகிஸ்தானின் நிரந்தரப்பிரதிநிதி ஷாகி இன்று இதைத்தெரிவித்தார்.

ஐ நா வின் புதிய பொதுக் காரியதரிசியைச் சந்தித்து ஜனாப் ஷாகி "முஜிபுர் விடுதலை" சம்பந்தமாகப் பேசினார்.

முஜிபுர் விடுதலை செய்யப்பட்டுதந்திரமாகவிராசாக இருக்கப்போகிறார் என்ற தமது அரசாங்கத்திடமிருந்து கிடைத்ததகவலை பொதுக் காரியதரிசியிடம் வாசெகுறிய தாகசெய்திகள் தெரிவிக்கின்றன.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் விரைவில் டாக்கா வந்து சேருவார் என்று ஐ நா. விலுள்ள பாரதப் பிரதிநிதி திரு சமர்சென் தெரிவிக்கிறார்.

இவரும் ஐ நா பொதுக் காரியதரிசியைச் சந்தித்துப் பேசிய பின்னரே இந்தத் தகவலை வெளியிட்டார்.

பூட்டோவின் அறிவிப்பையும், அதனைத் தொடர்ந்து பாரத பிரதிநிதி தெரிவித்த தகவலையும் கொண்டு விரைவில் முஜிபுர் டாக்கா வந்து சேருவார் என்று திரு சமர்சன் தெரிவித்தார்.

## றேடியோபாவனையாளருக்கு மேலும் சில வாரங்களுக்கு சலுகை

கொழும்பு, புதன்

வானொலிப் பெட்டிகளுக்கான உத்தரவுபத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேலும் சில வாரங்களுக்கு அவகாசம் அளிக்கப்படுகின்றது.

1972-ம் ஆண்டுக்குரிய வானொலி பாவனை உத்தரவுப் பத்திரங்களை 1971ம் ஆண்டு வானொலிப் பாவனை உத்தரவுப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதின் மூலம் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இதற்கு இன்னும் சில வாரங்கள் அவகாசம் அளிக்கப்படுகின்றது இந்தச் சலுகை மூன்று நாள் அறிவித்தலின்பேரில் ரத்துச் செய்யப்படும்.

வானொலிப் பெட்டிகளை சட்டவிரோதமாகப் பாவிக்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான புதிய சட்டம் ஒன்றை தபால் அமைச்சு கொண்டுவர உத்தேசித்துள்ளது. வானொலி பெட்டிகளை உத்தரவுப்பத்திரமின்றி பாவிப்பவர்களை காட்டிக்கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது.

## ஜெய்ரோவுக்கு பங்களாதேஷ் குழு

டாக்கா, ஜன. 5

ஜெய்ரோவில் இம்மாதம் 10ந் திகதி நடக்கும் ஆசிய ஒருமைப்பாடு மகாநாட்டில் பங்களாதேஷும் பங்குபற்றும். நான்கு பேர் கொண்ட குழு ஜெய்ரோவுக்கு செல்ல

## பொங்கலன்று தேசிய சுவீப் யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், வியா

தினசரி அதிர்ஷ்ட சுவீப்பும், தேசிய சுவீப்பும் இம்மாதம் யாழ்ப்பாணத்தில் இழுக்கப்படும். தைப்பொங்கல் தினமான 15ம் தேதி தினசரி சுவீப்பும், 24ந்தேதி தேசிய சுவீப்பும் யாழ்ப்பாணத்தில் இழுக்கப்படும்.

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கில் இவ்விரு சுவீப் இழுப்பும் இடம்பெறவிருக்கிறது

இம்மாதம் 15ம் தேதி நடைபெறவிருக்கும் சுவீப் இழுப்பு விழாவில் இரு அமைச்சர்களும் உதவி அமைச்சர் திரு. டி. பி. விக்கிரமசிங்காவும் கலந்து கொள்வார்கள்.

24ம் தேதி நடைபெறவிருக்கும் தேசிய சுவீப் இழுப்பு விழாவில் தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் கலந்து கொள்வார்.

வடபகுதி பிரதம சுவீப் விற்பனை ஸ்தாபனமான யாழ். நகரபலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் தலைவரும் மேயருமான திரு. அல்பிரட் துரையப்பா, இதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றார்.

### வீதிகளில் நிறுத்தும் வாகன வரி

## எதிர்பார்த்ததைவிட அதிக பயன் கிடைத்துள்ளதாம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ் நகர பிரதான வீதிகளில் நீண்டநேரம் வாகனங்கள் நிறுத்துபவர்களிடமிருந்து சாதாரண அடிப்படையில் டிக்கட் மூலம் பணம் அறவிடுவதற்கு முடிவு செய்திருப்பதாக மேயர் திரு. அல்பிரட் துரையப்பா நேற்றுத் தெரிவித்தார்

விருப்பதாக டாக்காவிலிருந்து கிடைத்த அதிகாரபூர்வமான செய்திகள் தெரிவிக்கின்றன.

வட இலங்கை வர்த்தக சம்மேளன உபதலைவர் தம் முடன் தொடர்பு கொண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

# கடந்த ஆண்டில் வடக்கில் 37 கொலைகள்!

## பொலிஸ் அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதியில் கடந்த வருடம் 37 கொலைகள் நடைபெற்றுள்ளன. இவைகளில் இருகொலைகள் சம்பந்தமாக மாத்திரமே இன்னமும் துப்புத்துலக்கப்படாமலிருக்கின்றது

வடமாகாண பொலிஸ் சுப்பிரின்டன் திரு ஆர். சுந்தரலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலிருந்து இத்தகவல் தெரியவருகின்றது. திரு. சுந்தரலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் பின்வரும் தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

கடந்தஆண்டில் 37கொலைகள் நடைபெற்றுள்ளன. இரு கொலை சம்பந்தமாக இன்னமும் துப்புத்துலக்கப்படவில்லை. முதலாவது, மரம்பனைச் சேர்ந்த திருமதி சிசிலியா ஜோசப்பின் என்பவர் இருக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதுடன், அவரது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன; கண்டு பிடிக்கப்படாத அடுத்த கொலை யாழ்நகரமட்டுவாலில் நெல்வயலுக்குள் கொலை செய்யப்பட்ட நிலையில் கிடந்த சடலம் தொடர்பான சம்பவம்.

மலாலியில் நடந்த கணபதிப்பிள்ளை என்பவரின் மனைவியான சின்னம்மாவின் கொலையே கடந்த வருடத்தில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தி கோரக்கொலையாகும். 8-10-71ல் நடந்த இந்த பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டு பின்னர் இடம்பெற்ற இக்கொலை இப்போது சுப்ரீம் கோர்ட் விசாரணைக்குப் பாரப்படுத்தப் பட்டுள்ளது.

கடந்தவருடத்தில் 37 வீடுகள் உடைக்கப்பட்டு திருட்டு நடந்துள்ளன. 11 சம்பவங்களில் ஒவ்வொரு இடத்திலும் 8 ஆயிரம் ரூபாய்க்குமேல் திருடப்பட்டுள்ளன. இந்த வீடு உடைத்து நடாத்தப்படும் திருட்டுகள் திட்டமிடப்பட்ட ஆசாமிகளால் நடாத்தப்பட்டதல்லவென்பதும், அயலவர்களால்தான் கூடுதலாக நடாத்தப்பட்டுள்ளன என்பதும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. நகைகளும், உடுதுணிகளுமே கூடுதலாக வீடுகளிலிருந்து திருடப்பட்டுள்ளன. இவைகளில் சில சம்பவங்களே இன்னமும் கண்டுபிடிக்கப்படாமலிருக்கின்றன.



### சைக்கிள், தந்திக்கம்பி திருட்டு

வடபகுதியில் சர்வசாதாரணமாக சைக்கிள் திருட்டும், தொலைபேசிக் கம்பிகள் திருட்டும் நடைபெற்று வருகிறது இதனைத் தடுப்பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த ஆண்டில் 6,800 ரூத்தல் தொலைபேசித் தந்திக்கம்பிகள் திருடப்பட்டுள்ளன. 65 தந்திக்கம்பித் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அரசாங்கத்துக்கு இதனால் 30 ஆயிரம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

வடபகுதியில் 1971 ம் ஆண்டில் 101 சைக்கிள் திருட்டுகள் நடந்துள்ளன. சைக்கிள் சொந்தக்காரரின் கவனயீனமே இச் சைக்கிள் திருட்டுகளுக்குக் காரணமெனலாம்.

தொலைபேசித் தந்திக்கம்பித் திருட்டுகளுக்கும் தொலைபேசித் திணைக்கள ஊழியர்களுக்கும் தொடர்பிருக்கலாமென்று சந்தேகிக்கப்படுகிறது. திட்டமிடப்பட்ட ஒரு கோஷ்டி பொன்றினாலேயே இந்த தந்திக்கம்பித் திருட்டு நடக்கிறது எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு சேவைக்கு பாராட்டு

பொலிசாரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நகரபாதுகாப்புச் சேவை மிகவும் நல்ல பலனை அளித்துள்ளது. கடந்த 4 மாதத்தில் எந்த ஒரு கொள்ளையும் யாழ்ப்பாண நகரத்தில் நடைபெறாதது குறிப்பிடத்தக்கது. சாவகச்சேரி, சுன்னாகம், பருத்தித்துறை, நெல்லியடி, தெல்லிப்பழை, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளிலும் பாதுகாப்புச் சேவையினர் மிகவும் சிறந்தமுறையில் கடமையாற்றிவருகின்றனர்.

சாந்தி
(சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
ஞாயிறு 2-30 மெற்னி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
பிராப்தம்
வியா. வெள்ளி. சனி 4-15
Dean Martin
in
BANDO LERO!
(Cinemascope-color)

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 p. m.
Sat. Sundays 10-30
James Garner
Joan Hackett
in
SUPPORT YOUR
LOCAL SHERIFF
(Panavision - color)
தினசரி 2-00, 10-00
சிவாஜி — சாவித்திரி
நடித்த
வடிவுக்கு வளைகாப்பு

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா
முத்துராமன் - நாகேஷ்
நடித்த
சவாலே சமாளி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா நடித்த
தேடிவந்த மாப்பிள்ளை

7-வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00 சனி, ஞாயிறு 10-30
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
முத்துராமன்
விஜயநிர்மலா
அசோகன்
நடித்த





என் அண்ணன்

லிடோ (யாழ்ப்பாணம்)
லிடோ (கொழும்பு)
தினசரி காலை 10-00 பி.ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30
★ சம்மிகபூர் ★ சர்மிலாதாகூர்
★ பிரான் ராஜேந்திரநாத்
★ கே. என். சிங்
நடித்த
சக்தி பிலிம்ஸ்
அன் ஈவினிங் இன்
பாரிஸ்
(ஈஸ்ட்மன் கலர்)


## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டு வேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) எஞ்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 3846

### விற்பனைக்கு

ராஜா படை மருந்து. தேமல், சக்கூலியற்ற சலவிதமான அரித்து நீர் வடியும் சரும வியாதிகளுக்கும் சிறந்த பூச்சு மருந்து எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3845

நல்ல பழக்கவழக்கமுள்ள உயர்தர அல்சேஷன் ஆண் பெண் நாய்கள் விற்பனைக்குண்டு. இனவிருத்திக்காகச் சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட அல்சேஷன் ஆண் நாய்களும் எம்மிடம் உண்டு. க. நடேசன், 15, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 3811


3-வது வாரம்
வெலிங்டன் சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-காஞ்சனா
நடித்த
சிவந்தமண்
(ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி மாலை 4-30
சனி, ஞாயிறு காலை 10-30
THE THOMAS
CROWN AFFAIRS
6-00, 10-00 சனி,
ஞாயிறு 2-30.
ராஜா வீட்டுப்
பிள்ளை

நியூ கபலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, இரவு 10-00
சனி, ஞாயிறு பி.ப. 2-30
சிவாஜிகணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
நெஞ்சிருக்கும்வரை

யாழ். தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-15, இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - வாணிஸ்ரீ
நடித்த
நிறைகுடம்

MANOHARA
(Jaffna)
Daily 4 Shows
James Bond
Sean Connery
in
THE MOLLY
MAGUIRES
(scope-color)


### விற்பனைக்கு

நாவலர் வீதி ரயில்வேக் கடவைக்கு அருகில், பனிநிலையம், பிரபல பாடசாலைகள் நவீன சந்தை ஆகியவற்றுக்குச் சமீபத்தில் நிலப்பரப்பு சுமார் மூன்று பரப்பு புக்காணி கிணற்றுடன், உடனடியாக கைமாற்றக்கூடிய நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க. பொ. சாம்வேயன், புறக்டர், பொற்பதிரோட், கொக்குவில். 3848

மக்கு உறுதியில் கீழுள்ள இரு காணிகள் நவாலி முதலியார் வளவு ஐந்துபரப்பு மானிப்பாய் வேலக்கைப், பிள்ளையார் கோயிலுக்குச் சமீபத்தில் கிட்டாண்டித் தோட்டம் ஒன்றேகால் பரப்பு—விபரங்களுக்கு சிவ தொயகம். 'கஸ்தூரி' லோட்டன் வீதி மானிப்பாய் தெற்கு என்ற விலாசத்தாருடன் 7-ந் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும். 3847

### வைத்தியம்

வாதம், ஏரந்தி, தொய்வு ஆகிய வியாதிகளை முற்றாகக் குணப்படுத்துவதில் திறமை பெற்ற டாக்டர் எஸ். வல்லிபுரம். (D.A.M.) தங்க வால் சரண் வைத்தியசாலை, இராச வீதி, நல்லூர் மார்க்கெட் யாழ்ப்பாணம். 3817

### தேவை

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு பொதுமக்களின் பாராட்டுதலைப்பெற்ற நெசவு ஸ்தாபனத்துக்கு நெசவில் தேர்ச்சிபெற்ற பெண்கள் தேவைப்படுகின்றனர். தக்கசான்றிதள்களுடன் நேரிலோ கடிதமூலமாகவோ தொடர்புகொள்ளவும். ரமணி நெசவு நிலையம். சுதுமலை வடக்கு, மானிப்பாய். 3853

பெற்றோல் நிலையத்தில் கடமையாற்றக்கூடிய Store Keeper தேவை. கட்டுப்பணம் கட்டத் தகுதியுள்ளவராக இருத்தல்வேண்டும். விண்ணப்பிக்கவும்: செ. கருணாகரன், 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 3852

## "சைவம் உயர்வடைய..."

மாவிட்டபுரம், புதன்

"முந்திய காலத்தில் உயர் நிலையில் வைத்து மதிக்கப்பட்ட சைவசமயம் இன்று நிலையற்ற ஒரு நிலையை அடைந்துள்ளது. இந்நிலை நீங்கிச் சைவம் உயர்வு அடையச் சைவமக்கள் கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றுடன் ஆகம முறைப்படி சைவநெறிகளைக் கடைப்பிடிக்கவேண்டும்."

இவ்வாறு யாழ்ப்பாணச் சைவ பரிபாலனசபைத் தலைவர் நியாயதுரந்தரர் த. சோமசுந்தரம் காரைநகரில் நடைபெற்ற சமய சாத்திரக் கருத்தரங்கில் பேசுகையில் கூறினார்.

காரைநகர் சைவமகா சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. ஆ. வே. அருணம்பலம் தலைமையில் இக் கருத்தரங்கு நடந்தது.

## தரமறிய ஆய்வு

கோண்டை, புதன்

கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத்தின் உத்தரவின்பேரில் நாடு பூராவிலும் உள்ள பாடசாலைகளின் கல்வித்தரம்பற்றி விரிவான ஆய்வொன்று நடாத்தப்படவிருக்கிறது.

தற்போது செயல்படுத்தப்பட்டுவரும் புதிய கல்விச் சீர்திருத்தங்களின் முன்னேற்றங்களை அறிந்துகொள்ளும் பொருட்டே இந்த ஆய்வு நடத்தப்படுகிறது.

முதல் பருவத்தில் நடாத்தப்படும் இந்த ஆய்வை ஒழித்து அறிக்கைகள் தயாரிக்குமாறு பிரதேச கல்வி அதிகாரிகளுக்கு அமைச்சு உத்தரவிட்டுள்ளது. இதன் காணப்படும் குறைபாடுகள் 2-வது பருவத்தில் நிவர்த்தி செய்யப்படும்.

## புத்தூர் கிராமாட்சிமன்றம் கேள்விவிளம்பரம்

1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10-00 மணிவரை கீழ்க்குறிப்பிடப்பட்ட நான்கு வேலைகளுக்கும் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து "சீல்" வைத்த கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். வேலைகள் ஒவ்வொன்றுக்கும் கேள்விப்பிணைப் பணம் ரூபா 25/-ம் கேள்விப் பத்திரப்பணம் ரூபா 10/-ம் செலுத்தவதன் பேரில் 1972-1-19ந் திகதி பிற்பகல் 3-00 மணிவரை என்னால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரத்தில் கேள்விகள் தயாரிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரப் பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

தேவையான மேலதிக விபரங்களை புத்தூர் கிராமாட்சி மன்றப்பணிமனையில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

### வேலைகளின் விபரம்

1. சிறிச்சால் வீதி வேலை.
2. வல்லியசிங்கம் ஞான மாலை வீதி வேலை.
3. வயிரவர் கோவிலடி ஏரந்தை ஒழுங்கை வேலை.
4. கிராமசபை மன்ற அலுவலகக் கட்டிட நிர்மாண வேலை

மு. திருநாவுக்கரசு;
தலைவர்,
புத்தூர் கிராமாட்சிமன்றம்,
கிராமாட்சிமன்றப் பணிமனை,
புத்தூர். 1972-1-4. 3354

### பிறந்த தின வாழ்த்து

நவாலியூர் வடக்கில் வசிக்கும் சலவைத் தொழிலாளர் சங்க கஸ்ப்பிள்ளை வல்லிபுரம் கந்தையா 6-1-72-ல் தனது 50-வது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். அவர் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறோம். 3351

## பறிமுதலுடன் ரூ.3,500 அபராதம்

கொழும்பு, புதன்

கடற்படை அதிகாரி எச். டி. எச். சேனரத்ன தலைமையில் வடபகுதிக் கடலில் ரோந்து புரிந்துகொண்டிருந்த இலங்கைக் கடற்படையின் மோட்டார்ப் படகு கடத்தலில் ஈடுபட்டிருந்த மோட்டார்ப்படகு ஒன்றை துரத்திப் பிடித்து அதில் உள்ள பொருள்களைக் கைப்பற்றியது.

கடத்தல் படகில் இருந்த 40,000 ரூபா பெறுமதியான 1,722 ருத்தல் ஏலம், சராயைப் பறிமுதல் செய்த சுங்க இலாகா கடத்தல்காரர்கள் மீது 3,500 ரூபா அபராதத்தையும் விதித்தது (நா)

......

### மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம் புதன்

புங்குடுதீவு கிழக்கு முருகமூர்த்தி கோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 30ம் திகதி நடைபெறவிருக்கிறது கிரியைகள் 22ம் திகதி ஆரம்பமாகும். முதல் ஐந்துதினங்களிலும் சமயச்சொற்பொழிவுகளும் பண்ணிசைக்கச்சேரிகளும் நாதஸ்வரக் கச்சேரிகளும் கொண்ட பல்இசை விழா இடம்பெறும் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அலங்கார உற்சவம் நிகழும்.




ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
(இருவேடங்களில்)
- அசோகன்
மனோகர்-சோ-தேங்காய் சீனிவாசன்
மனோரமா
நடித்த
நீரும் நெருப்பும்
(ஈஸ்ட்மன் கலர்)

# பாக். உளவுவிமானம் திசைதிருப்பி இந்தியாவில் இறக்கப்பட்டது

புதுடில்லி ஜன. 5

**பாகிஸ்தான் உளவு விமானம் ஒன்று நேற்று இந்தியாவுக்குள் திசைதிருப்பிக் கொண்டுவரப்பட்டுள்ளது.**

விமானியைக் கொன்றுவிட்டு விமானத்தை இந்தியாவுக்குத் திசைதிருப்பிக் கொண்டுவந்ததாக அதிலிருந்த லெப்டினன்ட் உமாயுன் ரசாக் என்பவர் தெரிவித்தார்.

தான் ஒரு வங்காளி என்றும் தம்மை மேற்குப் பாகிஸ்தானியர்கள் நல்லவிதத்தில் நடத்தவில்லையென்றும் அவர் தெரிவித்தார். இவர் விசாரணைக்காக காவலில் வைக்கப்பட்டுள்ளார். விமானியின் சடலம் மரணவிசாரணைக்காக எடுத்துச்செல்லப்பட்டது.

இச்செய்திபற்றி பாகிஸ்தான் அதிகாரிகள் எதுவித அபிப்பிராயமும் இன்னும் தெரிவிக்கவில்லை. பங்களாதேஷ் நெருக்கடி ஆரம்பமாவதற்கு முன்னர் இந்திய பிரயாணிகள் விமானம் ஒன்று காஷ்மீர் தீவிரவாதிகள் இருவரால் இவ்வாறு பாகிஸ்தானுக்குத் திருப்பிக் கொண்டுபோகப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. அந்த விமானத்தைத் திருப்பித்தருமாறு இந்திய அரசாங்கம் எவ்வளவோ கேட்டுக்கொண்டபோதிலும் அப்போதைய பாகிஸ்தான் அரசாங்கம் அதற்கு செவிமடுக்கவில்லை. அந்த விமானம் கடத்தல்காரர்களால் தீயிட்டுக்கொளுத்தப்பட்டது. கடத்திச்சென்ற நபர்களையும் பாகிஸ்தான் இந்தியாவிடம் ஒப்படைக்க முன்வரவில்லை. இப்பொழுது இந்தியாவுக்கு கடத்திவரப்பட்டுள்ள பாகிஸ்தான் உளவு விமானத்தை இந்தியா திருப்பிக் கொடுக்குமா என்பது தெரியவில்லை.

# பல்கேரியாவிலுள்ள பாக். தூதர் மாறினர்

பல்கேரியாவில் பாகிஸ்தான் அரசின் தூதுவராக இருந்துவந்த ஜனாப் முஸ்தபா கமால் என்பவர் பங்களாதேஷ் அரசுக்கு தமது விசுவாசத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். ஏற்கனவே பலநாடுகளில் பாகிஸ்தான் தூதரகங்களில் சேவை புரிந்த ஏராளமான ராஜதந்திர ஊழியர்கள் பங்களாதேஷிற்கு தமது விசுவாசத்தைத் தெரிவித்து மாறியிருக்கிறார்கள்.

**டாஸ் கருத்து**

இந்திய-பாகிஸ்தான் விவகாரத்தில் அமெரிக்க அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கை சம்பந்தமான இரகசியத் தஸ்தாவேஜுகள் வெளியானது பற்றி சோவியத் பத்திரிகையான டாஸ் கருத்து வெளியிட்டிருக்கின்றது. அமெரிக்க அரசின் ஊழல்களை இது எடுத்துக்காட்டுவதாகமட்டுமின்றி அமெரிக்க கொள்கை எவ்வளவு வஞ்சகமானது என்பதையும் இதுகாட்டுகின்றது என்று டாஸ் கூறுகின்றது.

## மீண்டும் குண்டுவீச்சு

நியூயோர்க், ஜன. 5

வடவியட்நாம்மீது மீண்டும் அமெரிக்கா குண்டுவீசக்கூடும் என்று இங்கு கருதப்படுகின்றது.

சமீபத்தில் நடத்தப்பட்ட ஐந்துநாள் குண்டுவீச்சில் அமெரிக்கர்களால் நிர்ணயிக்கப்பட்ட எல்லா முக்கிய நிலைகள் மீதும் குண்டுவீச முடியாமல்போய்விட்டதாகத்தெரிகின்றது. 35 அல்லது 40 வடவியட்நாம் ராணுவ நிலைகள்மீது அமெரிக்க விமானங்கள் குண்டுவீசித்தாக்கியுள்ளதாக அதிகாரி ஒருவர் கூறினார்.

# முஜிபுர் ரஹ்மான் விரைவில் டாக்காவுக்கு புறப்படுவார்?

ஷேக் முஜிபுர் ரஹ்மான் விரைவில் டாக்காவுக்குப் புறப்பட்டுச் செல்வார் என்று பாகிஸ்தான் செய்திகள் கூறுகின்றன.

வீட்டுக்காவலில் இருந்துவரும் ஷேக் முஜிபுர் ரஹ்மானை விரைவில் விடுதலை செய்யப்போவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி சுல்பிகார் அலிபூட்டோ இருதினங்களுக்கு முன் அறிவித்திருந்தது தெரிந்ததே. ஷேக்கை விடுதலை செய்யுமுன் அவருடன் பேச்சுக்கள் நடத்தப்போவதாகவும் பூட்டோ கூறியிருந்தார். ஆனால் ஷேக் எப்பொழுது விடுவிக்கப்படுவார் என்பதுபற்றி பூட்டோ விபரம் எதுவும் தெரிவிக்கவில்லை.

ஷேக்கை விடுவிப்பதற்கு அவரிடமே ஜனாதிபதி பூட்டோ பேரம்பேசக்கூடும் அல்லது நிபந்தனைகள் ஏதும் விதிக்கக்கூடும் என்று அவதானிகள் இப்பொழுது கருதுகின்றனர். இல்லையெனில் அவரை விடுவிப்பதில் ஏன் இவ்வளவு தாமதம் காட்டவேண்டும் என்று அவர்கள் கேட்கின்றனர்.

பங்களாதேஷிலுள்ள இந்திய படைகளை வெளியேற்றுவதற்கு ஷேக் முஜிபுர் ரஹ்மான் நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகவும் பாகிஸ்தான் செய்தியொன்று கூறுகின்றது.

இந்திய படைகளை கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேற்ற ஷேக் முஜிபுர் ரஹ்மானைப் பயன்படுத்திக்கொள்ள ஜனாதிபதிபூட்டோ முயற்சி எடுக்கிறாரா என்று ராஜதந்திர வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்படுகின்றது.

## ரோல்ஸ் ரோய்ஸ் ஸ்தாபனத்தின் சாதனை

லண்டன், ஜன. 5

மன்னர்களும் ராஜதந்திரிகளும் வர்த்தகர்களும் விரும்பிப் பாவிக்கும் சொகுசுக் கார்களைத் தயாரிக்கும் "ரோல்ஸ் ரோய்ஸ்" நிறுவனம் தனது உற்பத்தியில் ஒரு சாதனையைப் புரிந்துள்ளது.

1965-ம் ஆண்டில் அறிமுகப்படுத்திய ஸில்வர் ஷடோ பெல்விரக காரில் பத்தாயிரமாவது காரை இந்நிறுவனம் அண்மையில் தயாரித்து ஒரு அவுஸ்திரேலிய வர்த்தகருக்கு விநியோகித்துள்ளது. பீட்டர் வின் மொரிஸ் என்ற மேற்படி வர்த்தகர் வாங்கிய ஐந்தாவது "ரோல்ஸ் ரோய்ஸ்" கார் இதுவாகும்.

## யுவதி மாத்திரம் உயிர் பிழைத்தாள்

லிமா, ஜன 5

சுமார் 12 நாட்களுக்கு முன்னர் பெருநாட்டில் 92 பிரயாணிகளுடன் காட்டுப் பிரதேசத்தில் விழுந்து நொருங்கிய விமானப் பிரயாணிகளில் 17 வயதான ஒரே ஒரு இளம் பெண் மாத்திரம் உயிர் பிழைத்திருப்பது இப்பொழுது தெரியவந்துள்ளது.

விமானம் விழுந்தபொழுது தாம் நினைவோடு இருந்ததாகவும், ஏனைய பிரயாணிகளின் உடல்களோடு கிடந்த தாம் நொருங்கிய விமானத்திலிருந்து கீழே குதித்து 9 நாட்களாக நடந்து நகரை அடைந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

## நீருக்கடியில் 14 நாட்கள்

மாஸ்கோ, ஜன. 5

தண்ணீருக்குக் கீழ 40 மீட்டர் ஆழத்தில் உள்ள நிலையைத் தோற்றுவிக்கக் கூடிய மிகு அமுக்க அறை ஒன்றில் சோவியத் ஆராய்ச்சியாளர்கள் 14 நாட்களைக் கழித்தனர். நீருக்கு அடியில் உடல்நலத்திற்குக்கேடு இல்லாமல் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கான நிலைமைகளைக் கண்டறிய அவர்கள் முயன்றனர். மிகு அமுக்தச் சூழ்நிலையில் புதுமையாகவும், பயனுள்ளமுறையிலும் பணியாற்றுவதற்குத் தங்களது ஆராய்ச்சியின் முடிவுகள் பயன்படும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

## விக்கிரகங்கள் திருட்டு

மாவிட்டபுரம். புதன்

ஆலய விக்கிரகங்களை களவாகப் பெயர்த்து இனந்தெரியாதவர்கள் எடுத்துச் சென்றுள்ளனராம். இதுபற்றிக் காங்கேசன்துறைப் பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபையில் ஏற்பட்ட பிரிவினையால் ஆலயவிக்கிரகங்கள் பெயர்த்துக் களவாடப்படுகின்றனவாம். இப்படியான சம்பவம் ஒன்று அளவெட்டி வடக்கில் இடம்பெற்றுள்ளது.

அளவெட்டி வடக்கிலுள்ள ஒரு மடாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவன் அம்மன் மூர்த்திகளும் நந்தி பலிபீடமும் இப்படிக் களவாடப்பட்டுள்ளனவாம். இதுகுறித்து ஆலய பரிபாலன சபையைச் சேர்ந்த பொ. சிவபாதசுந்தரம் காங்கேசன்துறை பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இதையடுத்து காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் வி. செல்லையா தீவிர விசாரணை நடத்திவருகிறார்.

## சிறுவன் குளத்திற்கு பலி

யாழ்ப்பாணம். வியா

திருவெம்பாவை பூசைக்குச் செல்வதற்காக அதிகாலையில் எழுந்து குளம் ஒன்றில் நீராடச் சென்ற 14 வயதுச் சிறுவன் அந்தக் குளத்துக்கே பலியான பரிதாபச் சம்பவம் ஒன்று மீசாலை வடக்கில் நடைபெற்றுள்ளது.

சு. சற்குணம் என்பவரே இவ்விதம் மரணமானவராவர். தமது தம்பியார் ஒருவருடன் மீசாலை வடக்கு தடாகக்குளப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னாலுள்ள குளத்தில் நீராடச் சென்ற சற்குணசிங்கம் தம்பியாரை நீராட விட்டுவிட்டு தாமும் குளிப்பதற்காகக் குளத்தில் குதித்ததாகவும், குதித்தவர் வெளியே வரவில்லையென்றும், அங்கு நின்றவர்கள் கூறினார்கள். அதன்பின்னர் தேடியபோது சிறுவன் சேற்றில் புதைந்திருக்கக் கண்டதாகவும் விசாரணையில் தெரியவந்தது. (ஞ-ம)

# இன்சூரன்ஸ் தொழில் தேசியமயம்

பாகிஸ்தானின் இன்சூரன்ஸ் தொழில்களை புதிய அரசாங்கம் தேசியமயமாக்கியுள்ளதாகத்தெரிகின்றது. இன்சூரன்ஸ் தொழில்களை அரசாங்கக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதாக பாகிஸ்தான் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். நாட்டுமக்களின் நலனை யொட்டி எடுக்கப்படும் முக்கிய நடவடிக்கை இதுவென நிதிஅமைச்சர் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானின் அபிவிருத்தி வேலைகளுக்கு குறிப்பாக விவசாயத் தொழில்களுக்கு சீன உதவிகளைப்பெறுவது சம்பந்தமாக நேற்று இஸ்லாமாபாத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. சீனத்தூதுவருடன் பாகிஸ்தான் அதிகாரிகள் இந்தப்பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள்.

**இந்தியா மறுப்பு**

கிழக்குப் பாகிஸ்தானுக்கு நிவாரண உதவிகள் அனுப்புவதற்கான கோரிக்கைகளை இந்திய அரசாங்கம் நிராகரித்துவிட்டதாக கராச்சி வானொலி அறிவித்தது. கிழக்குப்பாகிஸ்தானில் இந்திய ராணுவம்தான் இன்னமும் ஆதிக்கம் செலுத்திவருகின்றது என்பதை இது காட்டுவதாகவும் அச்செய்தி கூறியது.

## பிரிட்டிஷ் முறையை ஆராய்கிறார்

லண்டன், ஜன. 5

இலங்கையில் உள்ள இறைவரி இலாகாவின் மாவட்ட அலுவலகங்களை புனரமைப்புச் செய்யக்கூடிய யோசனைகளுடன் உள்நாட்டு வருமான உதவிக்கமிஷனர் திரு. கந்தசாமி இரத்தினசபாபதி இவ்வாண்டு ஆரம்பத்தில் பிரிட்டனில் இருந்து கொழும்பு திரும்புவார்.

ஐ. நா. உபகாரச்சம்பளம் பெற்றுள்ள திரு. இரத்தினசபாபதி பிரிட்டனில் உள்நாட்டு வருமான மாவட்ட அலுவலகங்களின் அமைப்பு முறைகளை இப்போது ஆராய்ந்து வருகிறார்.

## ஜாகர்த்தா பயணம்

யாழ்ப்பாணம், வியா.

மாதகலைச் சேர்ந்த விஸ்வலிங்கம் சிங்காரவேலு என்பவர் ஜாகர்த்தாவிலுள்ள இலங்கைத் தூதராலயத்தில் பணியாற்றுவதற்காக விமானத்தில் பயணமானார்.

இவர் கொழும்பு வருமான வரித் திணைக்களத்திலும், பின்னர் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சிலும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர் நாடக கிராமிய நடிகர் வானொலிப் பேச்சாளருமாவார்

# புதுடில்லியில் பங்களாதேஷ் மந்திரி

இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக பங்களாதேச வெளிஉறவு அமைச்சர் திரு அப்துஸ்ஸமத் புதுடில்லிக்கு வந்திருக்கிறார்.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் விடுதலை செய்யப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது பற்றிய விஷயங்கள் குறித்து இந்திய அமைச்சர்களுடன் தாம் கலந்தாலோசிக்கப் போவதாக அவர் கூறினார்.

ஷேக்கின் நிலைமை பற்றி சரியான தகவல்களை அறியும்படி செஞ்சிலுவைச் சங்கத்திடம் தாம் கோரியிருப்பதாகவும் அவர் கூறினார். ஷேக் முஜிபுர்ரஹ்மானை விடுதலை செய்யும்படி பாகிஸ்தான் அரசை நெருக்கும்படி உலக நாடுகளை பங்களாதேஷ் அரசு தொடர்ந்து வற்புறுத்திவரும் என்றும் அவர் சொன்னார்.

**கப்பல் தொடர்பு**

இந்தியாவுக்கும் பங்களாதேஷிற்குமிடையிலான கப்பல் போக்குவரத்துக்கள் ஆரம்பமாகவுள்ளன. இந்திய கப்பல் கம்பனியொன்று இதனை ஆரம்பிக்கும்.

## யு. எஸ். மீது எகிப்து குற்றச்சாட்டு

கெய்ரோ, ஜன. 5

இஸ்ரேலுக்கு பென்டம் ஜெட் போர் விமானங்களை கொடுத்துதவ அமெரிக்கா முடிவு செய்திருப்பதாக எகிப்து கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

இஸ்ரேலுக்கு நிபந்தனையற்றமுறையில் அமெரிக்கா இப்படி உதவிசெய்து உலக அமைதிக்கு பங்கம் விளைவிப்பதாக கெய்ரோ குற்றஞ்சாட்டியுள்ளது.

## ஆட்சிமன்றத்திலே

— நாது நிருபர் பெரி.சுந்தரலிங்கம்

# ரோபர்ட் குணவர்தன அனுதாபத் தீர்மானம்

ஆட்சி மன்றம் இன்று மீண்டும் கூடியபோது காலஞ்சென்ற ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ரொபர்ட் குணவர்த்தனவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணையொன்றை சபை முதல்வர் திரு.மைத்திரிபால சேனநாயகா சமர்ப்பித்துப் பேசினர். அவரது பேச்சின் போது திரு. ரொபர்ட் குணவர்த்தன அரசியல் வாழ்வின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டு, திரு. ரொபர்ட்டின் மறைவு இந்நாட்டுத் தொழிலாள வர்க்கத்துக்கும், அரசியல் உலகிற்கும் மாபெரும் இழப்பு என்று குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, துக்கம் தோய்ந்த குரலில் 'ரொபர்ட்டின் அரசியல் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் தான் 1960-க்கும் 1965-க்கும் இடைப்பட்ட காலத்தில் தான் அவருடன் நெருங்கிப் பழகி அவருடைய அருமையான குணங்களை அறியக்கூடிய வாய்ப்பு கிடைத்தது' என்று ஆரம்பித்த ஜே.ஆர். 'இலங்கையின் உண்மையான புரட்சிவாதி ஒருவர் என்னைத்தால், எழுத்தால், செயலால் பேச்சால் திரண சக்தியோடு ஏழைகளுக்காக என்றென்றும் போராடியவர் அவர் ஒருவரே' என்று அஞ்சலி செலுத்தினர்.

'அரசியல் வாழ்வை பணம் பண்ணும் பிஸினஸாகக் கருதாமல் அரசியல் வாழ்வுக்கும் தனிப்பட்ட வாழ்வுக்கும் இடையில் எவ்வித வேற்றுமையில்லாமல் தனிவாழ்க்கையை உயர்த்திக் கொள்ள அரசியல் வாழ்வைப் பயன்படுத்தாமல் அன்னம் போன்ற போக்கில் ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் எதிர்த்தும் போராடி. இன்னல்கள் பல பெற்றிருந்த ஆசானியவர் ரொபர்ட்' என்றார் ஜே.ஆர்.

திரு. ரொபர்ட் குணவர்தனவின் ஆரம்பகால அரசியல் வாழ்வின் போது அதன் பின்னும் பல ஆண்டுகள் அவருடன் மிக நெருங்கித் தோளோடு தோள் நின்று பல தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களை நடத்தியவர்தான். டாக்டர் என். எம். மறைந்த மாவீரனுக்குத் தனது அஞ்சலியைச் செலுத்த எழுந்த என்.எம். 'ரொபர்ட்டைப் பற்றி மிக அதிகமாக அறிந்த அவருடைய அரசியல் வாழ்விலும் தனி வாழ்விலும் மிக நெருங்கியத் தொடர்புடையவன் தான்' என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டார்.

ரொபர்ட்டுடன் ஒன்றாக ஆனந்தாக் கல்லூரியில் படித்த காலத்திலிருந்து 1931ம் ஆண்டு வெள்ளவத்தை நெசவாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தியது. லங்கா சமசமாஜக் கட்சியை ஆரம்பித்து, கண்ணீராலும் செந்நீராலும் கட்டிக் காத்து, வளர்த்தது. யுத்த காலத்தில் சிறையிலிருந்து தப்பி இந்தியாவுக்குச் சென்று தலைமறைவாக வாழ்ந்து காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டது எனும் ரொபர்ட்டின் அரசியல் வாழ்வின் முக்கிய பகுதிகளைச் சுட்டிக் காட்டிய என். எம். இந்நாட்டின் அரசியல் சரித்திரத்தில் ரொபர்ட் என்ன இடத்தைப் பெறுவார் என்பதை எதிர்காலம்தான் நிர்ணயிக்கும் எனினும் தனது உடல் பொருள் ஆவி அனைத்தையும் திரிகரண சுத்தி

யோடு தொழிலாள வர்க்கத்தின் முன்னேற்றத்துக்காகவே அர்ப்பணித்த அரும் பெரும் தியாகி அவர் என்பதில் எவருக்கும் எந்த சந்தேகமும் இருக்க முடியாது' என்று முடித்தார்.

எந்தச் சந்தர்ப்பத்தையும் எப்படியாவது பயன்படுத்திக் கொண்டு தனது எண்ணத்தில் பட்டதை அப்பட்டமாக எடுத்துச் சொல்லி தனது அரசியல் எதிரிகளைத் தாக்க சற்றும் பின்வாங்காதவர் தான் ஹபராதுவ எம் பி திரு பிரின்ஸ் குணசேகரா.

ரொபர்ட்டின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, சம்பிரதாய பூர்வமாக நிறைவேற்றப்படும் பிரேரணை மீது பேசும்போது, யாரும் சாதாரணமாக 'மற்ற விஷயங்களைப்' புகுத்துவதில்லை சம்பிரதாயங்களைத் தாக்கி எறிவதில் தனி இன்பம் காண்பவராயிற்றே பிரின்ஸ் குணசேகரா!

'சோஷலிஸத்துக்காக இன்னல்களைத் தாங்கி ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராடிய என் எம்; கொல்வின்; லெஸ்லி; பீட்டர்; விக்கிரமசிங்க போன்ற தலைவர்கள் இன்று அமைச்சர் பதவிகளுக்காக தங்கள் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டு விட்டதை கண்டு கண்ணீர் விட்டுமனம் வெதும்பி மாண்டார் ரொபர்ட்' என்று தனது நீண்ட உரையின்போது குறித்தார் பிரின்ஸ்.

எழுதித் தயாரித்து வந்த தனது பேச்சை பிரின்ஸ் வாசிக்க, இடதுசாரித் தலைவர்கள் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

'புரட்சிகரவாதப் போதனைகளைப் போதித்தவர்களே போதனைகளைக்கேட்டு அதன்படி நடக்க முற்பட்டவர்கள் மீது துப்பாக்கி முனைகளைத் திருப்பியிடும் துக்ககரமான சூழ்நிலையில் இடதுசாரித் தலைவர்களின் துரோகத்தைப் பொறுக்க மாட்டாததாலே உயிர் நீத்தார் ரொபர்ட்' என்றபிரின்ஸ் 'புரட்சிவாதத்திலும் சோஷலிசத்திலும் உண்மையான உளச்சுத்தியான அக்கறையுள்ளவர்கள் யாரும் எச்சந்தர்ப்பத்திலும், வலதுசாரிகளுடனோ பிற்போக்குவாதிகளுடனோ எதுவித தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது; அப்படி வைத்துக் கொண்டால் நாளடைவில் சோஷலிஸக் கொள்கைகள் பெருங்கடலில் கரைந்த பெருங்காயமாக மாறிவிடும் என்பதைத்தான் ரொபர்ட்டின் இறுதிக்கால அரசியல் வாழ்வு எமக்கு எடுத்துக் காட்டும் பாடமும் படிப்பினையுமாகும்' என்று அறிவுறுத்தினர்.

ஒவ்வொருதிருப்பத்திலும் இன்றைய இடதுசாரித் தலைவர்களைப்பற்றி எக்காளமாகப் பேசிய பிரின்ஸ் குணசேகரா, ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராகப்போராடிய போது ரொபர்ட்டின் கால் அழுகி நொறுக்குப் பட்டதைப்பற்றி இன்று வாயாரப் பேசுபவர்கள் (என் எம் மின் பேச்சின் போது இதைப் பற்றிக் குறிப்பிட்டார்), புரட்சிவாதத்தில் நம்பிக்கை கொண்ட இளம் ஆண்களும் பெண்களும் இன்று இராணுவத்தினரால் நாய்கள் போல சுட்டுக் கொல்லப் படுவதை பார்த்து வாளாவிருப்பதோடு, பொதுஜனப் பாதுகாப்பு சட்டத்தில் தஞ்சம் புகுந்து தங்கள் பதவிகளைக் காப்பாற்றி கொண்டிருக்கின்' என்று கிண்டல் செய்தார்.

எது எப்படியிருப்பினும் தமிழரசுக்கட்சிச் சார்பில்

அனுதாபம் தெரிவித்துப் பேசிய உடுப்பிட்டி எம் பி. ஜயக்கொடி சொல்லியது போன்று 'தனி மனிதனின் பெருமையைப்பற்றி அறிய வேண்டுமானுல் அவனைப் பற்றி அவனது எதிரிகள் என்ன சொல்கிருர்கள் என்பதைத்தான் பார்க்கவேண்டும், ஆரம்பத்தில் தோழர்களாக இருந்து, அண்மைக் காலத்தில் எதிரிகளாக மாறிய இடதுசாரித் தலைவர்கள்; ஆரம்பத்தில் எதிரிகளாக இருந்து அண்மைக் காலத்தில் தோழர்களாக மாறிய ஜே. ஆர். போன்ற வலது சாரித் தலைவர்கள் ஒரே குரலில் ரொபர்ட்டின் பெருமைகளைப் பற்றிச் சொல்லியதே ரொபர்ட்டின் பெருமைக்குச் சான்று தானே!

......

### இரகசிய பதிவேடு

சிட்னி, ஜன. 5

இரண்டாவது உலக மகா யுத்தம் சம்பந்தமான அமைச்சரவை இரகசியப் பதிவேடுகளைப் பொதுமக்களுக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் வெளியிடவுள்ளது.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

வியாழன் (6. 1. 71)

(செய்திகள்: காலை 6-30. பகல் 12-45 மாலை 6-00. இரவு 9-00)

294 மீ அல்லது 59 மீ காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, சோ. சண்முகசுந்தரம். 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-50 வாரசம்பவம் 7-05 துதிப்பாடல் 7-30 குரல்வளை. 8-00 இசைவேளை, லக்ஷ்மி நடராஜன். 8-15 இஸ்லாமிய கீதம்.

இரவு 6-15 ஒடிவிளையாடு பாப்பா நடத்துபவர்: ராஜேஸ் அக்கா, 6-30 நாள வாத்தியக் கச்சேரி, 7-00 தமிழ்முழக்கம் சிங்காரம், 7-15 கமமும்புலமும், 7-30 வெளிநாட்டுச் செய்திகள், 7-35 மெல்லிசை வாத்தியக் கோஷ்டி இசையமைப்பு: ஆர். முத்துச்சாமி. 7-45 ஐக்கிய நாடுகள் சித்திரம் பரதி தயாரிப்பு சரவண முத்து. 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9 30 உரையாடல். 10-00 இசை நிகழ்ச்சி 72 மேளகர்த்தா இராகமாலிகை முதலாவது மூன்று வது சக்கரங்கள். பாடுபவர்கள்: ஏ. கே. கருணாகரன், ஏ திலகேஸ்வரன்.

### ஏழாலை மேற்கு வெற்றி

ஏழாலை, புதன் ஏழாலை மேற்கு சரஸ்வதி சன சமூக நிலைய கரபந்தாட்ட விளையாட்டுக் கழகத்தினருக்கும் ஏழாலை தெற்கு-மேற்குக் கிராமமுன்னேற்றச் சங்க கரபந்தாட்ட விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் சரஸ்வதி சன சமூகநிலையக் கோஷ்டி முதல் இரு ஆட்டங்களிலும் வெற்றி பீட்டியது.


## காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால் ★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்

★ ஓய்வெடுங்கள் ★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை

★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள் 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்ருகக் கரைவதாலகயால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்ருகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிருர்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

P.O.447 றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

# முகாமையாளர்களாக பயிற்றப்பட்ட பட்டதாரிகள்

மானிப்பாய், புதன்

நாட்டில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுறவுப் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களாக பயிற்றப்பட்ட பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கூட்டுறவுத் துறையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் மக்கள் அரசு பதவியேற்றபின் புதிய திட்டங்கள் திட்டப்பட்டு ஆரம்ப சங்கங்களும் உபகடைகளும் திறக்கப்பட்டன.

இத் திட்டப்படி நாடு பூராவிலும் உள்ள ஆரம்ப சங்கங்களுக்கு பொது முகாமையாளர்களாக கூட்டுறவுப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வந்தனர்.

பட்டதாரிகளுக்கு கூட்டுறவுப் பயிற்சியளித்து அவர்களை கூட்டுறவு பொது முகாமையாளர்களாக நியமிப்பதென அரசு முடிவுசெய்து நாடுபூராவிலும் பட்டதாரிகளைத் தெரிவுசெய்து கூட்டுறவுக் கலாசாலைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்றப்பட்ட இப் பட்டதாரிகள் ஆரம்பசங்க முகாமையாளர்களாக நேற்று முன்தினம் முதல் நியமனம் பெற்றுள்ளனர். கூட்டுறவு புனரமைப்புக்குப் பின் இது முதல் நியமனம்.

சாவகச்சேரி நகரசபை

# வரவு-செலவுத் திட்டத்தில் 4 லட்சம் ரூபா ஒதுக்கீடு

மீசாலை, புதன்

சாவகச்சேரி நகர சபைக் கூட்டம் சபைத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் தலைமையில்கூடி புதுவருட உத்தேச வேலைத்திட்டங்களைப் பரிசீலனைசெய்து வரவுசெலவுத்திட்டத்திற்காக 4 லட்சம் ரூபா ஒதுக்குவதாகத் தீர்மானித்துள்ளது.

இவ்வேலைத் திட்டத்தில், மின்சார விநியோகம், வீதிகள் செப்பனிடுதல், நீர்வடியும் வாய்க்கால்கள் உருவாக்குதல், சந்தையில் புதிய முறையில் மலசலகூடம் நிர்மாணித்தல் சந்தை மைதானத்தில் வியாபாரிகளுக்கு வசதியளிக்கும்முறையில் தரைத்தளம் கொட்டில்கள் ஆக்குதல்முதலிய வேலைகளைச் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சந்தையில் சிலவரிப்பணங்கள் கட்டப்படுவதென்றும் வரியிறுப்போர் வரிப்பணங்களை இனிமேல் நேரே சபைக் காரியாலயத்திற் கொண்டுசென்று நேரில் வழங்கி அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

வரி அறவிடுவதற்கு முன்னர்போல வரிவசூலிக்கும் உத்தியோகத்தர்கள் செல்லமாட்டார்களென்றும் தெரிவிக்கப்பட்டது.

# 'புடவை, சீனி விநியோகத்தில் புகார்கள் கிடைக்கின்றன'

குருநகர், செவ்

யாழ் மாநகர எல்லைக்குள் இருக்கும் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கடைகள் பொதுமக்களுக்கு வசதியான முறையில் இயங்க வேண்டும். சரியானமுறையில் பங்கீட்டுப் பொருட்களை விநியோகம்செய்யாதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் திரு அம்பிரகதுரையப்பா மேற்படி கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் அளிக்கப்பட்ட தேநீர் விருந்து வைபவத்திற்கு தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ் மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்க ஆணைக்குழுவினால் யாழ் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு துரையப்பா தொடர்ந்து பேசுகையில் எமது சங்க ஊழியர்கள் பொதுமக்களுடன் மரியாதையாகவும் கண்ணியமாகவும் நடந்துகொள்வது மிகவும் முக்கியமாகும். தாங்கள் அரசாங்க உத்தியோகத்தர்கள் என்ற நினைவில் குறிப்பிட்ட நேரத்திற்கு சங்கக் கடைகளைத் திறந்து குறிப்பிட்ட நேரத்தில் பூட்டிவிட்டுச் சென்றால் மட்டும் போதாது. பொதுமக்களின் தேவையைப் பொறுத்து கடைகளை ஒரு மணி நேரம் பிந்தியும் பூட்டலாம், கூடுதலான நேரம் கடை திறந்து வியாபாரம் நடத்தினால் அதற்கு தகுந்த காரணம் காட்டப்படுமானால் மேலதிக நேர ஊதியம் அந்த ஊழியர்களுக்கு கொடுக்கப்படும்.

அளவுக்குறைப்பு, பதுக்கிவைத்தல், பரபட்சமாக நடத்தல், விலைப்பட்டியல் வெளிப்படையாக ஆட்பவை இடம்பெறுமல் செய்தல் போன்ற குற்றச்சாட்டுகள் இனிமேல் இருக்காதவாறு ஒவ்வொரு முகாமையாளர்களும் நடந்துகொள்ள வேண்டும். எந்த ஒரு கடையிலாவது தவறு கண்டு பொதுமக்களால் எமக்கு புகார் செய்யப்பட்டால் அவர் உடனடியாக நிறுத்தப்பட்டே விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டிவரும்.

புடவை, சீனி போன்ற பொருட்களின் விநியோகத்தில் பல புகார்கள் தெரிவிக்கப் பட்டுவருகின்றன. பொதுமக்களை ஏமாற்றி வியாபாரம் செய்ய முனையும் எவரும் கடுமையாக தண்டிக்கப்படக்கூடும்.

சங்க பொது முகாமையாளர் திரு எஸ் தியாகலிங்கம், உபதலைவர் திரு இ செல்வராசா ஆசிரியர், ஆணைக்குழு உறுப்பினர் திரு ஜொன்சன் ஆகியோரும் உரையாற்றினர்.

## புதிய உறுப்பினர்

பருத்தித்துறை புதன்

கட்டைவேலி உடுப்பிட்டி ஆரம்ப சங்கங்களின் கீழ் இயங்கும் நாற்பதுக்கும் மேலான கூட்டுறவுச்சங்கங்கள் புதிய அங்கத்தவரைத் திரட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. இவ்வுறுப்பினரால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளே இறுதியில் ஆரம்ப கூட்டுறவுச்சங்கநிர்வாகத்திற்குப் பொறுப்பாயிருப்பர்.

## தரம் உயர்வு

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை தரம் உயர்த்தப்பட்டுள்ளது 1972ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் இவ் வித்தியாசாலையில் முதலாம் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு வரையும் வகுப்புக்கள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

# புதிய போர் திணிக்கப்பட்டால்..

புதுடில்லி, ஜன. 5

புதிய போர் ஒன்று இந்தியா மீது திணிக்கப்படுமானால் அதை எதிர்த்துச் சமாளிக்க இந்திய மக்கள் தயாராய் இருக்கவேண்டும் என இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறினார்.

கொலாப்பூர் என்ற இடத்தில் மக்கள் மத்தியில் பேசிய திருமதி காந்தி கடந்த 25 ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ள இந்தியப் பொருளாதாரத்தின் காரணமாகவே சமீபத்திய போரில் வெற்றியடைய முடிந்தது என்று அவர் கூறினார்.

## சிவகுருநாத பீட போதனை

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம்சிவகுருநாத பீடத்தில் பகவத்கீதை மாண்டூக்கியம் பகவத்கீதை மற்றும் வேதாந்த நூல்களும், யோகசுவாமிகள் அருளிய நற்சிந்தனைக்கு தத்துவ விளக்கமும் கிழமைக்கு இரு நாட்களுக்கு போதிக்கப் பட்டுவருகிறது.

வேறு நாட்களிலும் இவற்றை கேட்க அடியார்கள் விரும்பினால் அதற்கான நாளும் நேரமும் ஒழுங்கு செய்துகொடுக்கப்படும் என தர்மகர்த்தா பிரமானந்தா இராமலிங்கம் குமாரசுவாமி தெரிவித்திருக்கின்றார்.

## 'இடமாற்றத்தில் மாறுதல் வேண்டும்'

பருத்தித்துறை, புதன்

"அரசாங்க ஊழியர் நாட்டின் எப்பகுதியிலும் சேவை செய்ய வேண்டுமென்பது சட்டரீதியாக நடைமுறையில் இருந்த போதிலும் அதில் சில மாற்றங்களும் வேண்டும். காலத்துக்குக் காலம் அவர்கள் இடமாற்றம் செய்யப்படும் போது, அவர்களுடைய பிள்ளைகளின் கல்வி, தனிப்பட்ட குறைகள் ஆகியவற்றையும் அரசாங்கம் கருத்திற் கொள்ளவேண்டும்".

இவ்வாறு, அல்வாய் உபதபாற்கந்தோர் அதிபர் திரு எஸ் கணபதிப்பிள்ளை. கரவெட்டி தபாற் கந்தோரிலிருந்து வாழைச்சேனைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் திரு கே சங்கரப்பிள்ளைக்கு உடுப்பிட்டித் தொகுதி தபால் ஊழியர் அளித்த பிரியாவிடை வைபவத்திற்குத் தலைமை தாங்கிப் பேசியபோது கூறினார்.

## எதிர்பார்த்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதாந்த டிக்கட்டுகளுக்கு மாதம் 10 ரூபா வழங்கச் சம்மதித்துள்ளதாகவும் மேயர் தெரிவித்தார்

வாகனங்களுக்கு வரியாக 10 சதம் அறவிடும் திட்டம் வெற்றியளித்துள்ளதாகவும் இரண்டொரு வரைத் தவிர மற்ற எல்லாரும் இத் திட்டத்தை அமுல் நடத்தப் பூரண ஒத்துழைப்புத் தந்தார்கள் என்றும் மேயர் தெரிவித்தார்

முதல் நாளே எதிர்பார்த்ததிலும் பார்க்க கூடிய பயன் கிடைத்ததாகவும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மாதாந்த டிக்கட் எடுப்பதன் மூலம் தங்கள் வாகனங்களை எந்நேரத்திலும் நிறுத்தலாம் என்றும் மேயர் மேலும் கூறினார்

மாதாந்த டிக்கட் எடுக்கும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கென வாகனங்கள் நிறுத்த விசாலமான இடங்கள் ஒதுக்கப்படமாட்டாதென்றும் அவர்களும் மற்றவர்களைப் போல வாகனங்களை நிறுத்தலாம் என்றும் மேயர் தெரிவித்தார்

# கவிதைத் துறையில் ஈழத்தின் வளர்ச்சி

மானிப்பாய், புதன்

தமிழ் கவிதைத்துறையில் ஈழத்தின் தரம் உயர்நிலையில் உள்ளதுபோல மற்றும் இலக்கியத்துறைகளும் உயர்நிலையை அடைய ஈழத்து இலக்கிய கர்த்தாக்கள் உதவ வேண்டும்.

இவ்வாறு சுப்பிளானில் நடைபெற்ற தமிழ் விழாவில் கலந்து பேசுகையில் இரசிகமணி கனக செந்திநாதன் கூறினார். குப்பிளான் விக்கினேஸ்வரா கல்லூரியில் திரு ஆ. மகாலிங்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர்தொடர்ந்து பேசுகையில் யாழ்ப்பாணப் பகுதியில் இயற்றப்பட்ட பல தனிப்பாடல்கள் சிறந்த வகையில் உள்ளன. சிறந்த நகைச்சுவை உள்ளவையாகவும் சிந்திக்கத் தக்கதாகவும் இப்பாடல்கள் அமைந்துள்ளன என்றார்.

புலவர் பார்வதிநாதசிவம் பேசுகையில் காலத்துக்கு ஏற்றவகையில் புதுமை தழுவிய கவிதைகள் சிறுகதைகள், நாவல்கள் தமிழ் உலகில் தோன்றுவது வரவேற்கக் கூடியது. இலக்கியப் படைப்புக்கள் புதுமை வாய்ந்ததாக இருக்கின்ற அதே நேரத்தில் காலத்தால் அழியாத பழைய பண்பாடுகளையும் பேணும் சிறப்புடன் விளங்க வேண்டும் என்றார்.

யாழ் இந்துமகளிர் பாடசாலை ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம் பேசுகையில் சங்க இலக்கியங்களில் தமிழ்பெண் புலவர்கள் இயற்றிய செய்யுள்கள் இடம்பெற்றுள்ளன. அவை பெண்குலத்துக்கு எடுத்துக் கூறும் நல்ல பண்புகளை இன்றைய சமுதாயம் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

திரு புதுமைலோலன் ஆசிரியர் நடராசா கோவைமகேசன் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

## 4 நாகர் தலைவர்கள்

புதுடில்லி, ஜன 6

பங்களாதேஷ் சம்பந்திய போரின் போது இந்தியப் படைகளிடம் சரணடைந்த தலைமறைவு நாகர் தலைவர்கள் நால்வர் புதுடில்லிக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர் இவர்கள் விசாரிக்கப்படவிருக்கின்றனர். இதுவரை காலமும் இவர்கள் கிழக்குப் பாகிஸ்தானில் தலைமறைவாக இருந்துவந்துள்ளனர்.

## இன்று புங்குடுதீவில்

யாழ்ப்பாணம், வியா

சைவபரிபாலன சபையின் ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரமத்தில் இன்று நிகழவிருந்த காஞ்சிபுரம் மெய்கண்டார் சந்தானம் தொண்டை மண்டலாதீன குருமகாசந்நிதானம் சிவஸ்ரீ ஞானப்பிரகாசதேசிகபரமாசாரிய சுவாமிகளின் சொற்பொழிவு நிகழ்ச்சி ரத்துச்செய்யப்பட்டுள்ளது. சுவாமிகள் இன்று தொடக்கம் பத்து நாட்கள் புங்குடுதீவு சைவ சமய விழாவில் பங்குகொண்டு சொற்பொழிவாற்றுவார்

இலங்கை-இந்திய

## வானொலி தொலைபேசி தொடர்பு

கோட்டை, புதன்

இந்தியாவுடன் நேரடி வானொலி தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளைத் தற்போது இலங்கை அரசாங்க அதிகாரிகள் குழுவொன்றுமேற்கொண்டு வருகிறது.

இதனைத் இலங்கைப் பொலிஸ் சுங்கப்பகுதி சட்டவிரோதக் குடியேற்ற அதிகாரிகளுடன் இந்தியாவிலுள்ள இப்பகுதிகளின் அதிகாரிகளோடு தொடர்பு ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தொடர்பு ஏற்படுத்தப்பட்டால் கடத்தல் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொருமாதமும் இலங்கையிலிருந்து இரண்டரை கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் கடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

குருநகர், புதன்

பங்களாதேஷ் விடுதலை தினத்தை தமிழரசுக்கட்சியினர் இம்மாதம் 8ம் திகதி யாழ்ப்பாணத்தில் கொண்டாடவிருக்கின்றனர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் இது நடைபெறவிருக்கிறது.

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

கொடிகாமம், புதன்

"50 வருடத்துக்கு முன் நிறுவப்பட்ட இவ்வித்தியாலயத்தை முன்னேற்றுவதற்கு பழைய மாணவர் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டும், விஞ்ஞான கூடம் வகுப்பறைகள் கட்டிடங்கள், விளையாட்டு மைதானம் ஆகியவற்றை அமைக்க பழைய மாணவர் முன்வர வேண்டும்" கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்துக்கு தலைமைதாங்கிய திரு சி செல்லத்துரை இவ்வாறு கூறினார்.

புதிய திட்டப்படி 1-9 வகுப்புவரை நடாத்த அங்கீகாரம் அளித்த வடமாகாண கல்வியதிபதிக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேறியது பின்வருவோர்சங்க உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் என் குமாரசுவாமி, ஏ சி சிதம்பரப்பிள்ளை, கே. எஸ் மகேசன், தலைவர் திரு. கே எம் துவாரகேஸ்வரா, உப தலைவர்: பண்டிதர் பொ கந்தையினார், செயலாளர்: திரு கா யோகநாதன், உப செயலாளர்: திரு கே. இராசதுரை, பொருளாளர்: திரு சி செல்லத்துரை, உப பொருளாளர்: திரு என். எம் கலைநாதன், கணக்காளர்: திரு எஸ் அம்பலவாணர். 8 பேர் கமிட்டி உறுப்பினர்களாக தெரிவுசெய்யப் பட்டனர்.

பாடசாலை மாணவர்களுக்குரிய
* பாடசாலைப் புத்தகங்கள்
* பாடசாலை உபகரணங்கள்
தகுந்த கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
ஞானசுரபி
புத்தகக் கம்பனி
237, மின்சாரநிலைய வீதி — யாழ்ப்பாணம்.

UNDERGRADUATE LIBRARY -6 JAN 1972



### மணிவாக்கு

தினந்தோறும் காலையில் அரைமணி நேரம் தியானம் செய்தால், நாள்முழுதும் நீங்கள் சாந்தியுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கலாம். மனதிலே எல்லாரிடமும் அன்புசெலுத்தமுடியும். பிறர் குற்றங்களை மன்னிக்கவும், கருணைகொள்ளவும் இதனால் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இன்பம் ஏற்படவும் முடியும்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

வியாழக்கிழமை விரோதிகிருது வருஷம் மார்கழி மாதம் 22-ந் திகதி (6-1-72)


## இந்தியவம்சாவழிப் பிரதிநிதித்துவம்

இலங்கை மலைநாட்டிலே சுமார் பத்து லட்சம் இந்திய வம்சாவழியினர் வசித்து வருகிறார்கள். சென்ற சில வருடகாலமாக அவர்களுக்கு பாராளுமென்ட் சபையில் நியாயமான பிரதிநிதித்துவம் இல்லை. ஜனத்தொகை விதாசாரப்படி பார்ப்பின் அவர்களுக்கு 12 ஸ்தானங்களுக்குமேல் கிடைக்க வேண்டும். சோல்பரி கமிஷன் அறிக்கையிலே, அம்மக்களுக்கு 14 ஸ்தானங்கள் கிடைக்குமென்று குறிப்பிட்டிருந்தனர். 1947-ம் வருடத்தில் நடந்த பொதுத் தேர்தலில் அவர்கள் ஏழு ஸ்தானங்களைப் பெற்றனர். இன்று ஒரே ஒரு நியமன அங்கத்தவர்தான் (ஜனாப் ஏ. அஸீஸ்) இருந்துவருகிறார். அச்சமூகத்தவருக்கு இது எவ்வளவு பெரிய ஜனநாயக அநீதி என்பதை விளக்கத் தேவையில்லை.

இலங்கையிலே வயது வந்தோர் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை வழங்கப்படுகிறது. மலைநாட்டில் வசிக்கும் இந்திய வம்சாவளியினர் அனைவரும் சில வருடங்களுக்குமுன் ஒரே அடியில் தங்கள் வாக்குரிமையை இழந்தனர். இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்காளரின் பெயர்கள் இடாப்பிலிருந்து நீக்கப்பட்டன. இலங்கையிலே பிரஜா உரிமைச்சட்டம் நிறைவேற்றி, பிரஜைகளுக்குத்தான் வாக்குரிமை என்றும், இலங்கையில் ஒருவர் பிறந்ததுடன் அவரது தந்தையாரும் பிறந்திருந்தால்தான் பிரஜா உரிமை உண்டென்று சட்டம் செய்தால், மலைநாட்டிலே வசிக்கும் தமிழரில் பெரும்பாலோரும் வாக்குரிமையை இழந்தார்கள். இந்திய, பாகிஸ்தானியர் பிரஜைப் பதிவுச் சட்டம் பின்னர் நிறைவேற்றப்பட்டதென்றாலும், மிகக்குறைந்த எண்ணிக்கையுள்ளவர்களே அச்சட்டமூலம் பிரஜைகளாக முடிந்தது. இதனால் பின்னர் நடந்த தேர்தல்களில் ஒரு பிரதிநிதியைக் கூட அவர்களால் தெரிவு செய்து அனுப்பமுடியவில்லை.

இப்பெரிய குறையைத் தீர்க்க, பல அரசாங்கங்களும் தங்களுக்குவேண்டிய இந்திய வம்சாவழியினரில் ஒருவரை நியமித்து வருகின்றது. இனி புதிய அரசியலில் நியமன ஸ்தானங்கள் இரத்தாகையால் (1978 வருடத்துக்குப் பின்) இந்திய வம்சாவழியினருக்கு எங்ஙனம் பிரதிநிதித்துவம் அளிப்பதென்பது பற்றி கருத்து வேற்றுமைகள் இருந்தன. பதிவுப் பிரஜைகளான இந்திய வம்சாவழியைச் சேர்ந்த வாக்காளரை தனி இடாப்பில் சேர்த்து, அவர்களுக்குத் தனித் தொகுதி ஏற்படுத்தி தங்களுக்குரிய பிரதிநிதிகளை அவர்கள் தெரிவுசெய்யலாமென்று ஒரு யோசனை கூறப்பட்டது. இதனால் மலைநாட்டில் வசிக்கும் சிங்கள சமூகத்தவரின் எதிர்ப்பு இல்லாது போவதுடன், நியமன முறையைவிட இது மேலானதாகவும் தோன்றலாம். ஆனால் இத்தனித் தொகுதிமுறை, அம்மக்களை நாட்டுமக்களிடமிருந்து பிரித்து ஒதுக்குமென்று அஞ்சி, இம்முறையை இந்திய வம்சாவழியினரின் இருபெரிய ஸ்தாபனங்களும், இந்திய அரசாங்கமும் ஒப்பவில்லை.

ஆகவே இச்சமூகத்தவரும் கலந்துவாழும் நாட்டிலே, இந்தியவம்சாவளிப் பிரஜைகள் ஓரளவில் வசிக்கும் பிரதேசங்களை இருபிரதிநிதி அல்லது மூன்று பிரதிநிதித் தொகுதிகளாக்கி புதிய அரசியலில் உத்தேசித்துள்ளது வரவேற்கத்தக்கதாகும். அத்தொகுதிகளில் ஒவ்வொரு வாக்காளருக்கும் இரண்டு அல்லது மூன்று வாக்குகள் இருக்கும். ஒருவர் தமது மூன்று வாக்குகளையும் ஒருவருக்கே அளிக்கமுடியும். ஆனால் இந்திய வம்சாவழியினர் தங்கள் நம்பிக்கைக்குரிய ஒருவரைத் தெரிவுசெய்ய முடியுமென்று நம்பப்படுகிறது. மலைநாட்டில் எவ்வளவு தொகுதிகளில் இந்த வாய்ப்பு இருக்குமென்பது தெரியவில்லை. இரட்டை அங்கத்தவர் தொகுதிகளில் ஒவ்வொரு ஸ்தானத்தை அம்மக்களுக்காக சில காலத்துக்காவது ஒதுக்கிவைப்பது அதிக சுதந்திரமாக இருக்கும். எப்படியும் அம்மக்களைத் தனித்து ஒதுக்காமல் ஓரளவு பிரதிநிதித்துவமாவது கிடைக்க முயற்சி செய்யப்பெற்றுள்ளது.

## ஒரு திருத்தம்

நேற்றைய 'ஈழநாடு' இதழில் 'இந்திய வம்சாவழியினருக்கு ஆட்சிமன்றத்தில் பிரதிநிதித்துவம்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் சுதந்திரத்துக்கு முன்னர் என்ற உபதலைப்பின் கீழ் வரும் பகுதியில் 'இலங்கைப் பிரதம மந்திரி...' என்று ஆரம்பமாகும் பகுதிக்கு முன் பின்வரும் பகுதியைச் சேர்த்து வாசித்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். -ஆ-ர்

இலங்கை சுதந்திரம் பெற்றதும் பதவிக்குவந்த முதலாவது அரசாங்கம் இந்தியர்-பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தை 1949ம் ஆண்டு கொண்டுவந்தது. ஒரே வீச்சில் இந்தியர்கள் அனைவரது வாக்குரிமையும் ரத்து செய்யப்பட்டது.

இலங்கையில் தங்கியிருப்பவர்கள் மாத்திரம் இலங்கை பிரஜாவுரிமைக்கு மனுச் செய்ய வசதியளிக்கப்பட்டனர். இதன் கீழான நிபந்தனைகளை ஒருசிலரால் மாத்திரமே அப்பொழுது பூர்த்திசெய்ய முடிந்தது. அதன்பின்னர் இந்திய வம்சாவழியினர் நியமனம் பெற்ற ஒருவரால் அல்லது இருவரால் மாத்திரம் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டனர். ஆனால் இவ்வாறு நியமனம் செய்யப்படுவது சம்பந்தப்பட்ட மக்களுக்கோ இந்திய அரசுக்கோ திருப்தியளிக்கவில்லை.

1964-ல் ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தானதின் பின்னர் இந்த மக்களை தனிப்பட்ட தேர்தல் பட்டியலில் பதிய வேண்டும் என்றும் தனியான தொகுதிகள் ஒதுக்கவேண்டும் என்றும்...".

# புதிய அரசியல் அமைப்பும் அந்நியர் ஆக்கித்தந்ததும்!

(கே. ஜி. நவரத்தின)

1948-ம் ஆண்டில் நமது நாட்டை விட்டு பிரிட்டிஷார் வெளியேறிய போது நமக்காக அவர்கள் ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கித் தந்து விட்டுச் சென்றார்கள். சோல்பரி அரசியல் திட்டம் என்பது அதன் பெயர். அதுதான் இப்பொழுதுள்ள நமது அரசியல் அமைப்பு. இந்த அரசியலமைப்பை நீக்கி விட்டுப் புதிய அரசியல் அமைப்பை நாமே உருவாக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஏற்ப இப்பொழுது புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. இந்தப் புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தின் நகல் இப்பொழுது அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டு வருகிறது. நகல் அரசியல் அமைப்புத் திட்டத்தைக் கவனிக்கையில் புதிய அரசியலமைப்பு பழைய அரசியலமைப்பிலிருந்து (இப்போதுள்ள அரசியலமைப்பு) முற்றிலும் வேறுபட்டதாகவே இருக்குமென்று தோன்றுகிறது. ஒற்றையாட்சி முறை தொடர்ந்திருக்கும், இப்போதைய ஆட்சிமன்றப் பிரதிநிதிகளாக உள்ளவர்கள் புதிய அரசியல் அமைப்பின்கீழ் தேசிய சபை உறுப்பினர்களாக (எம். பிக்கள் இனி எம். என் ஏக்கள்) வந்தாலும் இன்று அவர்கள் அனுபவித்து வரும் சலுகைகள் உரிமைகள் தொடர்ந்தும் அனுபவிப்பது. பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தொடர்ந்தும் வாக்குரிமை இருக்க வேண்டும் என்பது போன்ற ஒருசில அம்சங்கள் இப்போதுள்ள அரசியலமைப்பிலிருப்பது போலவே புதிய அரசியலமைப்பிலும் இடம்பெறுகின்றன. இவைதவிர புதிய அரசியல் அமைப்பு இப்போதைய அரசியலமைப்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகவே இருக்கும் என்பது நகல் அரசியலமைப்பிலிருந்து தெளிவாகிறது.

'சிலோன்' என்று இப்பொழுது வழங்கப்படும் பெயரே நீக்கப்படுகிறது. புதிய நகல் அரசியலமைப்புத் திட்டம் முழுவதிலும் இந்த நாட்டின் பழம் பெரும் பெயரான "ஸ்ரீலங்கா" என்ற பெயரே உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

0 இலங்கை ஒரு குடியரசாகும்.

0 இங்கிலாந்தின் மகாராணி இலங்கைக்கும் மகாராணியாக இனி இருக்க மாட்டார்.

0 அரசியல் அமைப்பு ரீதியாக மகாராணியின் பிரதிநிதியாகச் செயல் பட்டு வந்த கவர்னர் ஜெனரல் இதுவரை பிரதம மந்திரியின் ஆலோசனையின் மீது நியமிக்கப்பட்டு வந்தார் இனி பிரதம மந்திரியே குடியரசுத் தலைவரை (ஜனாதிபதி) நியமிப்பார்.

0 இதன் படி இதுவரை மகாராணிக்கு விசுவாசம் தெரிவித்து கவர்னர் ஜெனரல் பதவிப் பிரமாணம் செய்ததற்குப் பதிலாக இனிமேல் அரசியல் அமைப்புக்கே விசுவாசம் தெரிவித்து குடியரசுத் தலைவர் பதவிப் பிரமாணம் செய்ய வேண்டும்.

0 மக்கள் பிரதிநிதிகள் சபை என இப்போது வழங்கப்படும் சட்ட மன்றம் இனி "தேசிய சபை" என்றே வழங்கப்படும்.

0 இப்பொழுதுள்ளது போல் இனியும் அதிகாரப் பங்கீடு இருக்க மாட்டாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை மட்டுமே கொண்ட 'தேசிய சபை' தான் முழு ஆட்சி அதிகாரத்தையும் கொண்டதாக இருக்கும். (பிரிட்டனில் ஆட்சிமன்றம் நிறைவேற்றும் சட்டங்கள் செல்லுபடியாகாதென்று தீர்ப்பளிக்கும் உரிமை அங்கு உயர் நீதிமன்றத்துக்கு இல்லை. ஆட்சி மன்றமே பூரண அதிகாரமுள்ளதாகும். தேசிய சபையே இங்கு முழு அதிகாரமுள்ளதாக இருக்கும் என்ற அம்சம் பிரிட்டனைப் பின்பற்றுவதாக உள்ளது)

0 இதுவரை மக்கள் பிரதிநிதிகள் சபையின் ஆயுட்காலம் ஐந்து வருடமாக இருந்து வந்துள்ளது. இனி தேசிய சபையின் ஆயுட்காலம் ஆறு வருடங்களாக இருக்கும் (தேசிய சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுபவர் ஆறுவருடங்கள் அதன் உறுப்பினராக இருப்பார்.

0 இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள் பின்பற்றும் பௌத்த மதத்துக்கு அரசியல் அமைப்பிலேயே அங்கீகாரமளித்து விசேஷ அந்தஸ்து இனிமேல்தான் கிடைக்கவிருக்கிறது. இப்போதுள்ள அரசியலமைப்பில் பௌத்த மதம் பற்றிப் பிரஸ்தாபமே இல்லை.

0 சிங்களம் சட்ட மொழியாகிறது. அதாவது சட்டங்கள் யாவும் சிங்களமொழியில்தான் உருவாக்கப்படும்.

0 நீதிமன்ற மொழியும் சிங்களமாகவே இருக்கும். ஆனால் தமிழ் மக்களே பெரும்பான்மையாக வாழும் பகுதிகளான வடக்கு கிழக்கு மாகாணங்களில் வழக்கு விசாரணைகள் தமிழ் மொழியில் நடத்தலாம். நீதிமன்றப் பதிவேடுகள் சிங்களத்திலும் இருக்க வேண்டும்.

0 சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டதென்றும் ஆனால் பெரும்பான்மையினரான சிங்கள பௌத்தர்களுக்கு எதிராகச் செயல்படுத்தப்பட்டதாகவும் கருதப்பட்ட, இப்போதுள்ள அரசியலமைப்பிலிருக்கும் 29-வது ஷரத்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைச் சாஸனம் ஒன்று சேர்க்கப்படும்.

0 ஆட்சி மன்றத்தில் ஒருமனதான சம்மதம் கிடைத்தாலும் கூட இப்போதுள்ள 29-வது ஷரத்தைத் திருத்தவோ மாற்றவோ முடியாது என்று நீதிமன்றங்கள் தீர்ப்பளித்திருக்கின்றன. இது போலல்லாமல் புதிய அரசியல் அமைப்பில் சேர்க்கப்படும் அடிப்படை உரிமைச் சாஸனத்தை, தேசிய நலனைக் கருத்தில் கொண்டு அவசியமானால் திருத்தவோ குறைக்கவோ இடமிருக்கும்.

அரசியல் அமைப்பிலுள்ள முக்கியமான சில அம்சங்கள் இவை. மற்றும் சில பகுதிகளை நாளை தருகிறோம்.


## மரண அறிவித்தல்

### புறக்டர் டபிள்யு. பி. கனகரத்தினா

ஏ. ஜே. கனகரத்தினா டபிள்யு என் கனகரத்னா கலாநிதி எஸ் ஜி கனகரத்னா, செல்வி பத்மா ஆகியோரின் அருமைத் தந்தையாரும் திருமதி [illegible] வல்லிபுரம். சின்னையா ஆகியோரின் சகோதரருமான புறக்டர் டபிள்யு பி கனகரத்னா காலமானார். அன்னாரது பூதவுடல் யாழ்ப்பாணம் சென் பேரீஸ் சேமக்காலையில் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: ஏ ஜே கனகரத்தினா,
41, மூன்றாம் குறுக்குத் தெரு.
யாழ்ப்பாணம்

3352

## மரண அறிவித்தல்

### எம். எஸ். ராஜசிங்கம்

கோப்பாயைச் சேர்ந்த எம். எஸ். ராஜசிங்கம் (காணி பதிவுகாரர், யாழ். மாவட்ட கைத்தொழில் பதிவு) காரர்) காலமானார். இவர் அற்புதராணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற மயில்வாகனம் பொன்னம்மா ஆகியோரின் புதல்வரும், கமலா (போதனா பல்கலைக் கழகம்) வசந்தா (கொழும்புச் சட்டக்கல்லூரி) ராஜாதிராஜன் (கொழும்பு பல்கலைக் கழகம்) சிறி அருணா, மல்லிகா, எல்லாளன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிறேஸ், நவரட்ணம், தங்கரட்ணம், பூமணி ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற குணரட்ணம், லஷ்மி வி. கே. செல்லையா, எஸ். ஆர். ராசையா ஆகியோரின் மைத்துனரும், ஜி ஏ ரட்ணவரதரின் மருமகனுமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று (6-1-72) மாலை 4 மணிக்கு கோப்பாயிலுள்ள சென் மேரி சேமக்காலையில் நடைபெறும். உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 3353


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 62-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜனவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.